# ‘முரசொலி செல்வம்’ படத்திறப்பு: முதல்வர் புகழுரை...! முதல் பக்கத் தொடர்ச்சி

ஆகியிருக்கிறது. அதிலிருந்து எப்படி மீளப்போகிறோம் என்பதை நான் எண்ணி எண்ணித் தவித்துக்கொண்டு இருக்கிறேன். எதற்காகச் சொல்கிறேன் என்றால், பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தபோதும், கோபாலபுரத்தில் ‘இளைஞர் தி.மு.க.’ என்ற அமைப்பைத் தொடங்கியபோதும் எனக்குத் துணையாக இருந்தவர்.

**எப்படி கூட்டம் நடத்த வேண்டும். எப்படி பேச்சாளரை அழைத்து வர வேண்டும். எப்படி நோட்டீஸ் போட வேண்டும்.**

**எப்படி போஸ்டர் அடிக்க வேண்டும். என்பதையெல்லாம் எனக்குக் கற்றுக் கொடுத்தவர். அதற்குப் பிறகு இளைஞர் அணியாக உருவாகியபோது அப்போதும் எனக்குத் துணை நின்று என்னை ஊக்கப்படுத்தியவர், உற்சாகப்படுத்தியவர்.**

**எப்படிப் பேச வேண்டும் என்று – எனக்குப் பயிற்சி அளித்தவர்!**

ஒரு மாநாடு என்று சொன்னால், கட்சியின் பெரிய கூட்டம் என்று சொன்னால், ஏதேனும் கழக நிகழ்ச்சி என்று சொன்னால், ஏதேனும் நிகழ்ச்சிக்குப் போகிறேன் என்றால் அதைக் கேள்விப்பட்டு முதல்நாளே என்னை அழைத்து ஒரு சீட்டைக் கொடுப்பார். என்ன பேச வேண்டும்; எப்படிப் பேசவேண்டும்; என்ன பாயிண்டில் பேசவேண்டும்; அதை எப்படி ஏற்ற இறக்கத்தோடு பேசவேண்டும் என்று எனக்குப் பயிற்சி அளித்தவர். அப்படிப்பட்டவர் இன்றைக்கு இல்லை என்று எண்ணும்போது நான் வேதனைப்படுகிறேன்.

அவர் பெங்களூருக்குச் சென்று செட்டிலானதற்குப் பிறகு ஏறக்குறைய ஒரு 25-30 ஆண்டு காலமாகியிருக்கிறது. ஆனால் மாதத்திற்கு ஒரு முறையாவது அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது சென்னைக்கு வந்துவிடுவார். கழகத்தின் முக்கியமான நிகழ்ச்சி, முப்பெரும் விழா நிகழ்ச்சி, தலைவர் கலைஞர் அவர்களுடைய பிறந்தநாள், வீட்டில் ஏதேனும் நிகழ்ச்சிகள் இருந்தால் அதற்கு; இப்படி மாதத்திற்கு ஒருமுறையாவது, இரண்டு முறையாவது சென்னைக்கு வருவார். இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் தங்கி விட்டுப் போவார். வருகின்ற செய்தியை எனக்குச் சொல்லிவிடுவார். அவர் சென்னைக்கு வந்தவுடன் மாலையில் அவருடைய வீட்டிற்குச் சென்றுவிடுவேன். நான் மட்டுமல்ல; அண்ணன் துரைமுருகன், இங்கே இருக்கக்கூடிய இந்நாள் – முன்னாள் அமைச்சர்கள்; கழக முன்னணியினர்; அனைவரும் போய்விடுவோம். நேரம் போவதே தெரியாமல் பேசிக்கொண்டிருப்போம். பல்வேறு நிகழ்ச்சிகளை எங்களுக்கு எடுத்துச் சொல்வார். நாட்டில் என்ன நடக்கிறது என்று கேட்டுத் தெரிந்து கொள்வார். நாங்கள் சென்னையில் இருந்து தமிழ்நாட்டில் நடக்கக்கூடிய செய்தியை அறிந்து கொள்வதைவிட பெங்களூரிலிருந்து அதிகமான செய்திகளை அறிந்து எங்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்வார். அந்த அளவிற்குத் துணை நின்றவர் நம்முடைய மதிப்பிற்குரிய அண்ணன் செல்வம் அவர்கள்.

**அரசியல் – பொதுவாழ்வில், எனக்கு தொடர்ந்து அறிவுரை வழங்கியவர்!**

கழகத்தின் முக்கியமான நிகழ்ச்சிகள் மட்டும் அல்ல, தேர்தல் களத்தில் பிரச்சாரக் கூட்டங்கள் அல்லது அரசு நிகழ்ச்சிகள் என நான் கலந்து கொள்ளும் அத்தனை நிகழ்ச்சிகளையும் நேரலையாக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்வார்கள். அந்தக் காட்சிகளை முழுமையாகப் பார்ப்பார். அந்த நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு நான் காரில் வந்து ஏறுவேன். அவ்வாறு ஏறியவுடன் முதல் அழைப்பு அவருடைய அழைப்பாகத்தான் இருக்கும். அவர் அழைக்காவிட்டாலும் நான் அழைத்து விடுவேன். அவர் அந்த அழைப்பில், “இப்படி எல்லாம் பேசினாய், மிகவும் சிறப்பாக இருந்தது; எழுச்சியாக இருந்தது. இன்னும் இவ்வாறு மாற்றிப் பேசி இருக்கலாம்; இன்னும் கொஞ்சம் விரிவாகப் பேசியிருக்கலாம்” என்றெல்லாம் அறிவுரை சொல்வார். ஒன்று விடாமல் பார்த்து விடுவார். தொடர்ந்து எனக்கு அறிவுரைகளை வழங்கி வந்தார். காலை, மாலை என்று இரண்டு முறையாவது எனக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசுகின்ற வழக்கத்தை நாங்கள் பெற்றிருந்தோம்.

தனக்கென்று எதையும் எதிர்பார்க்காமல், அவன் நல்லவனோ - கெட்டவனோ, அவன் எதிரியா - நண்பனா என்று அதைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல், ஏதேனும் ஒரு சூழ்நிலையில் அவர்களுக்கு நல்ல காரியத்தைத்தான் அவர் தொடர்ந்து செய்திருக்கிறார். அது தான் உண்மை.

**‘முரசொலி – சில நினைவலைகள்’ பொக்கிஷம் என ஆசிரியர் பாராட்டு!**

‘முரசொலி: சில நினைவலைகள்‘ பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். 100 கட்டுரைகளை அதில் எழுதி, அது புத்தக வடிவில் கூட வந்திருக்கிறது. அதைக்கூட நம்முடைய ஆசிரியர் அவர்கள் பேசுகிற போது ‘பொக்கிஷம்‘ என்று சொன்னார்கள். இளைஞர்களுக்கெல்லாம் அது ‘பாடம்‘ என்று சொன்னார்கள். அதில், நான், அழகிரி, தமிழ் (தமிழரசு) என எங்களைப் பற்றியும் தொடக்கத்திலேயே குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார். அதை நான் படித்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**இது ஒன்றுபோதும் எங்களுக்கு!**

“உடன் படிக்கும் தோழர்கள் மாலை நேரங்களில் கிரிக்கெட், கால்பந்து போன்ற விளையாட்டுகளில் காலம் செலவு செய்த நேரத்தில் கலைஞர் வீட்டுப் பிள்ளைகள் (நான், எனது தம்பி, எனது அண்ணன்) முரசொலியில் பகுதி நேரப் பணியாளர்களாக ஊழியம் செய்து கொண்டிருந்தனர். 500 ரூபாய், 1,000 ரூபாய் சம்பளத்திற்கு நாங்கள் வேலை பார்த்திருக்கிறோம். படிக்க வேண்டிய நேரத்தில்கூட பேப்பர் மடித்துக் கொண்டிருந்தனர். பொருள் ஈட்டும் நோக்கோடு முரசொலி நடத்தப்பட்டிருந்தாலும்கூட பரவாயில்லை, கலைஞர் ஈட்டிய பொருளையும் அது கரைத்துக் கொண்டிருந்தது. கலைஞரின் குடும்ப இளைஞர்கள் அனைவரும் கலைஞர் ஊட்டிய இலட்சிய வேட்கையில் தங்கள் இளமையைப் பலி கொடுத்து வந்தனர். பெரியார், அண்ணா வழியில் தான் ஏற்றுக் கொண்ட தன் லட்சியம் நிறைவேற, தன்னை மட்டு மல்ல, தன் குடும்ப உறுப்பினர்கள் பலரையும் அந்த வழியில் பயணிக்க வைத்தவர் கலைஞர்” என்று குறிப்பிட்டு இருக்கிறார். இது ஒன்று போதும் எங்களுக்கு! இதை நான் பொக்கிஷமாக எனது மனதில் பதிய வைத்துக் கொண்டிருக்கிறேன்.

> **உடன் படிக்கும் தோழர்கள் மாலை நேரங்களில் கிரிக்கெட், கால்பந்து போன்ற விளையாட்டுகளில் காலம் செலவு செய்த நேரத்தில் கலைஞர் வீட்டுப் பிள்ளைகள் (நான், எனது தம்பி, எனது அண்ணன்) முரசொலியில் பகுதி நேரப் பணியாளர்களாக ஊழியம் செய்து கொண்டிருந்தனர். 500 ரூபாய், 1,000 ரூபாய் சம்பளத்திற்கு நாங்கள் வேலை பார்த்திருக்கிறோம். படிக்க வேண்டிய நேரத்தில்கூட பேப்பர் மடித்துக் கொண்டிருந்தனர். பொருள் ஈட்டும் நோக்கோடு முரசொலி நடத்தப்பட்டிருந்தாலும் கூட பரவாயில்லை, கலைஞர் ஈட்டிய பொருளையும் அது கரைத்துக் கொண்டிருந்தது. கலைஞரின் குடும்ப இளைஞர்கள் அனைவரும் கலைஞர் ஊட்டிய இலட்சிய வேட்கையில் தங்கள் இளமையைப் பலி கொடுத்து வந்தனர். பெரியார், அண்ணா வழியில் தான் ஏற்றுக் கொண்ட தன் லட்சியம் நிறைவேற, தன்னை மட்டுமல்ல, தன் குடும்ப உறுப்பினர்கள் பலரையும் அந்த வழியில் பயணிக்க வைத்தவர் கலைஞர்” என்று குறிப்பிட்டு இருக்கிறார். இது ஒன்று போதும் எங்களுக்கு! இதை நான் பொக்கிஷமாக எனது மனதில் பதிய வைத்துக் கொண்டிருக்கிறேன்.**

எனவே, இப்படிப்பட்ட நிகழ்ச்சியில் நான் ஒரு அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன், ‘முரசொலி செல்வம் அவர்கள் பெயரால் மிக விரைவில் அறக்கட்டளை ஒன்று உருவாக்கப்பட்டு, திராவிட இயக்கத்தைச் சார்ந்த படைப்புகளுக்கும், படைப்பாளிகளுக்கும் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கு வது, அந்தப் பரிசை ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் முப்பெரும் விழா நிகழ்ச்சியில் வழங்குவது‘ என முடிவு செய்திருக்கிறோம்.

**வாழ்க செல்வம் அவர்களுடைய புகழ்!**

இதைத்தொடர்ந்து இங்கு நம்முடைய ஆசிரியர் அவர்கள் வைத்த வேண்டுகோளான, முரசொலி செல்வம் அவர்களின் பெயரில் ’திராவிட இதழியல் பயிற்சிக் களம் ஒன்றை கல்லூரியாக உருவாக்க வேண்டும்’ என்ற அந்த கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்ற உறுதியைச் சொல்லி, வாழ்க செல்வம் அவர்களுடைய புகழ்... வாழ்க செல்வம் அவர்களுடைய புகழ் என்று கூறி நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



கோஆப்டெக்ஸ், எழும்பூர், தில்லையாடி வள்ளியம்மை விற்பனை நிலையத்தில் நேற்று (22.10.2024) கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தீபாவளி சிறப்பு விற்பனையினை துவக்கி வைத்து, புதிய இரகங்களை அறிமுகம் செய்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் திருமதி. வே.அமுதவல்லி, கைத்தறித் துறை இயக்குநர் அ.சண்முக சுந்தரம், துணிநூல் துறை இயக்குநர் திருமதி. இரா.லலிதா, கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் தீபக் ஜேக்கப் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

# துணை முதல்வராக பொறுப்பு ஏற்றுள்ள உதயநிதிஸ்டாலினுக்கு வாழ்த்து - தீர்மானம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி – என்.கௌதமன் சிறப்புரை!

நாகை. அக். 23-

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக பொருளாளர் மு. லோகநாதன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.ராஜேந்திரன், இல.மேகநாதன், க. மறைமலை, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்மணிவண்ணன், கற்பகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் பேசினார். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக வருகை தந்த நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சர், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ். கே.வேதரத்தினம், கழக தீர்மான குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், மகா.குமார், கே. பழனியப்பன், செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், சிக்கல் என்.ஆனந்த், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ.பா. மலர்வண்ணன் நகரக் கழகச் செயலாளர்கள் இரா. மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக் குழு உறுப்பினர்கள் எம்.பாண்டியன், எஸ். பன்னீர்செல்வம், உமாசெந்தாமரை, கோசி.குமார், எஸ்.பி.டி.சார்லஸ், எல். எஸ்.ஈ. பழனியப்பன், இல.பழனியப்பன், பேரூர் கழகச் செயலாளர்கள் க. அட்சய லிங்கம், மரியசார்லஸ், முகமதுசுல்தான், சி.சுப்பரமணியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, இரா.முருகையன் அ.பாரிபாலன், க.சத்தியமூத்தி, ஆர்.துரைராஜ், இளம்சுந்தர், பால.முரளி, ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, இளம்.சுந்தர், ப.உதயக்குமார், ஆர்.ஆர்.குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், கேஸ் வீ.செந்தில், பி.முருகானந்தம், எஸ்.வி.டி.அருள், எஸ்.பால்ராஜ், எஸ்.சந்தோஷ், ஆர். சுரேந்தர், வ.கமல், எம். தினேஷ்குமார், எஸ்.பாலமுருளி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.அசோக், ஜி.தாமோதரன், தி.கலையரசன், ஜெ.ஆர்.கே.சுரேஷ், கு.பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

வாக்களித்த மக்கள் மன மகிழ்ச்சியடையும் அளவிற்கு வாக்களிக்க மறந்தவர்களும் போற்றி பாராட்டும் அளவுக்கு இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் வியந்து போற்றிகின்ற அளவுக்கு உலகின் பல்வேறு நிறுவனங்களை ஈர்க்கும் அளவுக்கு திராவிட மாடல் ஆட்சியை வழங்கி வருபவர் நமது கழகத்தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின் ஆட்சியில் திறன்மிகு துணை முதல்வராக நம் கழக இளைஞர் அணி செயலாளர், இளம் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்களை நியமித்துள்ளார்கள். நம் இளம் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்கள். தெளிவான கொள்கையும் அதற்கான துணிச்சலையும் கொண்டவர் உதயநிதிஸ்டாலின் அவர்கள். 2019 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக கிராமபுறங்களில், கிராம சபைக் கூட்டங்கள் நடத்தி தமிழகம் முழுவதும் வலம் வந்தவர் நம் இளம்தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் எய்ம்ஸ் மருத்துவமனை, குடியுரிமைச் சட்டம், நீட்தேர்வு ரத்துக்கு மாபெரும் கையெழுத்து இயக்கம், அண்ணா பல்கலைகழகம் இரண்டாக பிரிக்க எதிர்ப்பு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய முறைகேடு போன்ற மக்கள் பிரச்சனைகளுக்கு குரல் கொடுத்த நம் இளம் தலைவர் அவர்கள் சட்டமன்ற தொகுதிக்கு 10 ஆயிரம் பேர் வீதம் கழக இளைஞர் அணிக்கு உறுப்பினர்களை சேர்ந்து 234 தொகுதிகளிலும் திராவிட மாடல் பயிற்சி பாசறைக் கூட்டம் நடத்திக் காட்டிய சரித்திர இளைஞர், நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி ஆகிய மூன்று கழக சார்பு அணிகள் மூலம் போராட்டங்கள் முன்னெடுத்து தமிழக வரலாற்றில் பொறிக்கத்தக்க முத்திரை பதித்த நம் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சேலம் மாநகரில் சுமார் 6 லட்சம் இளைஞர்களை திரட்டி இளைஞரணி மாநில மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தி காட்டிய இளம் தலைவர் அவர்களுக்கு கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசில் துணை முதல்வர் பொறுப்பு வழங்கிய கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு துணை முதல்வராக பொறுப்பு ஏற்றுள்ள இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளைளயும் தெரிவித்துக் கொள்வது என்றும் நாகை மாவட்டப் பொறுப்பு அமைச்சராக பொறுப்பு ஏற்றுள்ள பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழிக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வது என்றும், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவக்ளின் ஆணைக்கினங்க தற்போது தொடங்கியுள்ள வடகிழக்கு பருவமழையின் காரணமாக பாதிப்படைகின்ற மக்களுக்கு உதவிடும் வகையில் மீட்பு பணி மற்றும் நிவாரண பணிகளில் மாவட்டகழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்வது என்றும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமக்கை மகன், தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக திகழ்ந்த அரசியல் மேதை முரசொலிமாறன் அவர்களின் இளவல், கழகத்தலைவர் தளபதி அவர்களின் தங்கை கணவரும், தலைவர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையாம் முரசொலி நாளிதழிதழை கலைஞருக்கு பக்கபலமாக 50 ஆண்டுகள் கட்டிகாத்த கழக உடன்பிறப்புகளின் செஞ்சம் நிறைந்து வாழ்கின்ற முரசொலியின் முன்னாள் ஆசிரியர் முரசொலி செல்வம் அவர்கள் மறைவுக்கு இந்த கூட்டம் தனது ஆழ்ந்த இரங்களை தெரிவித்துக் கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

## புதுக்கோட்டை மாவட்டம் – கறம்பக்குடியில்

# 300 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

புதுக்கோட்டை, அக். 23 -

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் 21.10.2024 அன்று வழங்கினார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது: -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணாக்கர்கள் கல்வியில் சிறந்து விளக்கிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதனடிப்படையில் இல்லம் தேடி கல்வித் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு கல்வித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 300 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

அதன்படி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், கறம்பக்குடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 100 மாணவர்களுக்கும், கறம்பக்குடி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 200 மாணவிகளுக்கும், என ஆகமொத்தம் 300 மாணாக்கர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

எனவே தமிழக அரசின் மூலம் வழங்கப்படும் இந்த விலையில்லா மிதிவண்டிகளை பெற்றுக்கொண்ட மாணாக்கர்கள் அனைவரும் இதனை நாள்தோறும் பள்ளிக்குச் சென்று வருவதற்கு பயன்படுத்தி தங்களது உடல்நலத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் (பொ) க.ஜெயந்தி, ஒன்றியக்குழுத் தலைவர்கள் மாலா ராஜேந்திரதுரை (கறம்பக்குடி), மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), பள்ளிக்கல்வி துணை ஆய்வாளர் மு. இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.




கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை தெற்கு மாவட்டத்தில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றியதைத் தொடர்ந்து, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமை உரையாற்றினார். உடன் தொகுதி பொறுப்பாளர்கள் சிவகாசி த.வனராஜா, டிஸ்கோ எம்.அலாவுதீன், பா.செல்லத்துரை மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்.

## ஆழ்வார்திருநகரியில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகத் திறப்பு விழா!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பங்கேற்பு!

திருவைகுண்டம், அக். 23 -

ஆழ்வார்திருநகரியில் புதிதாக துவங்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்.

தமிழகம் முழுவதும் சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு நூலகத்தை முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகம் என்ற பெயரில் தி.மு.க. இளைஞர் அணி அமைக்க வேண்டும் என துணை முதலமைச்சரும் தி.மு.க. மாநில இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதைத் தொடர்ந்து தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஆழ்வார்திருநகரியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த நூலகத்தின் திறப்பு விழா நடைபெற்றது. இதில் மீன்வளம் மீனவ நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு நூலகத்தை திறந்து வைத்து புத்தகங் களை பார்வையிட்டார்.

இந்த நூலகத்தில் திராவிட இயக்க வரலாறுகள் குறித்தும் கலைஞரின் பல்வேறு புத்தகங்கள், அண்ணா பெரியார் மற்றும் சமூகம் சார்ந்த பல்வேறு புத்தகங்கள், போட்டி தேர்வுக்கான புத்தகங்கள் என பல்வேறு புத்தகங்கள் நூலகத்தில் உள்ளது. இந்த நூலகத்துக்கு வருகை தந்த பலர் புத்தகங்களை வாசித்து சென்றனர்.

இந்த நிகழ்ச்சியில் மாநில தி.மு.க. இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ரகு, மாநில வர்த்தக அணி செயலாளர் உமரிசங்கர், முன்னாள் எம்.எல்.ஏ. டேவிட் செல்வின்,

தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் ராமஜெயம், துணை அமைப்பாளர் பாலமுருகன், பேரூராட்சி தலைவர் சாரதா பொன் இசக்கி, மருத்துவ அணி துணை அமைப்பாளர் டாக்டர் பொன் இசக்கி, பேரூராட்சி துணைத் தலைவர் சுந்தர்ராஜன், கவுன்சிலர்கள் ராஜலட்சுமி, மந்திரமூர்த்தி, அஸ்ரா பேகம், நகர இளைஞரணி செயலாளர் இசக்கிகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் மருதுபாண்டியர்களின் 223வது நினைவு தின அரசு விழா, காளையார்கோவிலில் நினைவு அனுசரிப்பு மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் குருபூஜை விழா ஆகிய நிகழ்வுகளின் போது, கடைப்பிடிக்க வேண்டிய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றுதல் குறித்த கலந்தாலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவீன் உமேஷ் டோங்கரே, முன்னிலையில் நடைபெற்றது. உடன் தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள், சமுதாய அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.